بِسْمِ ٱللَّٰهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

# EID-UL-ADHA SERMON

## ஈதுல் அத்ஹா குத்துஃபா

**(02 September 2017/ 10 Dhul Hijjah 1438 Hijira)**

## Ibrahim (as) “Remarkable Example of Fidelity”

**இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்பிக்கைக்கு சிறந்த உதாரணம்**




**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

ஈதுல் அத்ஹா என்பது ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை)முடையவும் ஹஸ்ரத் இஸ்மாயில் நபி (அலை)முடையவும் உயரிய தியாகங்களை நினைவு கொள்ளும் தினமாக கொண்டாடப்படுகின்றது. நிச்சயமாகவும் இப்ராஹீம் (அலை) அவர்கள் நம்பிக்கையின் விஷயத்தில் சாதனைப் படைத்தவாராகயிருந்தார். அன்னாரின் நேர்மையும் தூய்மையும் சுத்தவும் காரணமாகவே, அல்லாஹுவுக்கு நெருங்கிய நண்பாராகவும் நெருங்கிய அடியாராகவும் அன்னாருக்கு மாற முடிந்தது. அல்லாவிட்டால் அன்மீக உலகில் அதாவது அல்லாஹ்வின் பார்வையில் இந்த உயரிய நிலையை அடைவதற்கு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இயலாமலிருந்திருக்கும்.

நம்பிக்கையின் உன்னதமான நிலைகளில் நுழைந்து தம் இதயத்தை அன்னார் தூய்மையாக்கி கொணடார். அல்லாஹ் அல்லாற்றவையை யாவும் அன்னார் தம் இருதயத்தில் இருந்து வெளியேற்றிக் கொண்டார். அல்லாஹ்வின் மீதான அன்பைக் கொண்டு தம் இருதயத்தை அன்னார் நிறைத்தார். பின்னர் அல்லாஹ்வின் விருப்பதற்கு உகுந்தவார் செயலாற்றினார். அவ்வழியில் அன்னார் உறுதியுடன் நிலை கொண்டார். முடிவில் அன்புக்குரிய தம் மகனை இறை வழியில் பலி அர்பித்து விடுவதாக அன்னார் கனவு கண்டார். அக் கனவுக்கு வேறு விளக்கங்களை அளித்துக்கொள்ள அன்னார் தயாராகவில்லை. அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை திடமாகயிருந்தது. அதனால் அன்புக்குரிய மகனை தம் கைகளால் பலி அர்பித்துக் கொள்ள அன்னார் தயாராகிக் கொண்டார். இதைக் குறித்து ஆழமாக ஒன்று சிந்தியுங்கள். எதாவது ஒரு நோய் காரணமாக தம் மகன் திடிரென இறந்து விட்டதாக எண்ணுங்கள். அந்நேரம் அந்த மனிதனின் நிலை எவ்வாறிருக்கும்? அல்லாஹ்வின் மீது அவர் சந்தேகமுடையவராக மாறிட வாய்ப்புள்ளது. அவர் அல்லாஹ்வுக்கு எதிராக எல்லா வகையிலான எதிர்புகளும் எழுப்ப துவங்குவார்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மகனின் மீதான அனைத்து பாசங்களையும் மாற்றி வைத்து அல்லாஹ்லின் மீதான பாசத்திற்கு முன்னுரிமை அளித்தார். இத்தகையாளர்களுக்கு அல்லாஹ் எதுவும் இழக்க அனுமதிப்பதில்லை. அப்போது அத்தகைய நபர் அல்லாஹ்வின் நண்பராக மாறுகின்றார்.

அல்லாஹ் மீது அன்னார் எந்த அளவிற்கு நேசத்தைவைத்திருந்தார் என்பதைக் குறித்து திருக் குர் ஆனை படித்துக் கொள்ளும் பொழுது உங்களுக்கு உணரயியலும். அந்நேசம் காரணம் அன்னாருக்காக அல்லாஹ் வெளிப்பாடுகளின் கட்டை அவிழ்த்துக் கொண்டான். அன்னாரின் தலைமுறைகளிலிருந்து நபிமார்களை நியமித்து வந்தான். அன்னாரின் இரண்டு புதல்வர்கள் (இஸ்ஹாக் (அலை)மும் இஸ்மாயில் (அலை)

மும்) நபிமார்களாகயிருந்தனர். அவர்கள் வழி (இரத்த பந்தம் வழி) ஏராளமான நபிகள் தோன்றிக் கொண்டார்கள். இப்ராஹீம் (அலை) மின் முன்மாதிரியிலிருந்து மனுக்குலத்திற்கு அனைத்தும் படிப்பினை உள்ளது. நேர்மையுடையவும் உண்மையுடையவும் பாடம். நேர்மையையுடையவும் உண்மையுடையவும் எடுத்துக்காட்டாக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர் திகழுகின்றார்.

எனவே அல்லாஹ்விடம் நேர்மை காட்டுவதற்காகவும் அதைப் போல் உண்மையும் நம்பகத்தன்மையும் வெளிப்படுத்திக் கொள்வதற்காகவும் நம் இவ்வுலக வாழ்க்கையிலான அனைத்து மகிழ்ச்சிகளையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அத்தகைய மகிழ்ச்சிகளுக்கு ஒரு மரணம் வந்து சேர வேண்டும். நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் ஆளாகி கொள்ளவேண்டும். உங்களின் இதயத்தில் நுழைந்த எல்லா சிலைகளையும் நொறுங்க வைக்கவேண்டும். அதற்காக நீங்கள் தயாராகவேண்டும். அது வாயிலாகவே எல்லாம் வல்ல இறைவனை நமக்கு அடைய முடிவது. இந்த சிலைகள், உங்களின் எல்லாவற்றையும் அவைக்காக அர்பித்துக் கொள்வதற்கு தேவைப்படுகின்றது. ஆகவே அவையை உங்களின் இதயங்களிலிருந்து நீக்கிக் கொள்ளுங்கள். உருவ வணக்கம் என்பது ஒரு புகைப்படம் அல்லது சிலை, சூரியன், சந்திரன் போன்றவையை வணங்குவது மட்டுமின்றி (இவைகளை ஒன்றும் நீங்கள் வணங்கவில்லை. ஆனால் நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.) இறைவனைவிட அன்பு மற்றெந்த பொருளுக்கு அளித்தாலும் அது உருவ வணக்கமே ஆகும். இன்று முஸ்லீம்கள் பொதுவாகவும், அஹ்மதிகள் குறிப்பாகவும் அல்லாஹ்வின் வார்த்தைகளை கவனிப்பதில்லை. அவர்களின் சிலை என்பது/ அவர்களின் கலீ∴பா என்ன கூறுகின்றார் என்பதை மட்டுமே அவர்கள் கவனித்துக் கொள்வது. அத்தகைய இதயங்களில் அல்லாஹ்விடமான அன்பு எப்படி நுழையும்? பாருங்கள்! அல்லாஹ்வின் அடியானிடம் அவர்கள் பகமை வைத்திருக்கின்றனர் என்பது அவர்களுக்கு கிடைக்கும் ஒரு அடையாளமாகும். அத்தோடு அவர்களின் சிலைகளிடம் அவர்கள் அன்பு செலுதிதக்கொள்ளவும் செய்கின்றனர்.

இன்று! நீங்கள் ஈதுல் இத்ஹ கொண்டாடுகின்றீர்கள். இந்த கொண்டாட்டம், ஒரு விலங்ககை அறுத்துக்கொள்ளவும் அதன் மாம்சத்தை புசித்துக் கொள்ளவும் செய்தல் என்பதல்ல என உணர்ந்துக் கொள்ள வேண்டும்.இந்த மகத்தான ஈதைக் குறித்து ஒவ்வொருவரும் மிக ஆழமாக சிந்திக்க வேண்டும். இது புனிதராகிய இப்ராஹீம் (அலை) அவர்கள் புரிந்த தியாக பூரணமான செயல்களின் பலனாக இந்த உம்மதத்தின் மீது அல்லாஹ் அவனது ஒரு அருளை பொழிந்திருக்கின்றான். இப்ராஹீம் நபி (அலை)மின் இதயத்தைக் குறித்தும், தன் மீது எந்த அளவிற்கு அன்னார் அன்பை வைத்திருந்தார் என்பதைக் குறித்தும், அல்லாஹ்வுக்கு நன்கு தெரியும். தம் மகனிடமும் மனைவியிடமும் வைத்திருந்ததை விட அன்பு தன்னிடம் வைத்திருந்தார்

என்பதைப் பற்றியும் அல்லாஹ்வுக்கு தெரியும். அன்னார் தம் முதுமைகட்டத்தில் ஒரு குழந்தைக்காக பிரத்தனை செய்தார். அல்லாஹ் அன்னாருக்கு ஒரு குழந்தையை அளித்துக் கொண்டான். ஆனால் அக் குழந்தையைக் கொண்டே அல்லாஹ் அன்னாரை சோதித்தான். கனவு வழியாக அக் குழந்தையை பலியிடுவதற்கு அல்லாஹ் அன்னாருக்கு கட்டளைவிடுத்தான். முதுமையில் ஒரு குழந்தையை அளித்திருந்தும் அச்சோதனையில் அன்னார் வெற்றியடைந்தார்.

அல்லாஹ்வின் அன்புக்காக தம் அன்புமகனை பலி அர்பிக்க அன்னார் முன்வந்தார். இறை அன்புக்கு முக்கியத்துவம் அளித்தார். ஏகனாகிய அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை பாதுகாப்பதற்காக மற்றனைத்தையும் தவிர்த்துக் கொண்டார். மிக பெரிய பதவிகளை அளித்து அல்லாஹ் அன்னாரை எவ்வாறு கண்ணியப்படுத்தினான் என்பதை பாருங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்.

**“அல்லாஹ்வின் ஆணையைப் பூரணமாக நிறை வெற்றியை இப்ராஹீமுடைய (ஆகமங்களிலிருந்து அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா?) (53:38)**

முயற்சிக்காமலல்ல, அன்னார் அந்நிலையை அடைந்துவிட்டது. வாழ்க்கை முழுவதும் அன்னர் நேர்மையாளராகவும் களங்கமற்றவராகவும் இறையச்சமுடையவராகவும் இருந்தார். அது மட்டுமின்றி தூய்மையும் நேர்மையும் ஆன இதயம் கொண்டே அன்னார் இத்தகைய வெகுமதிகளுக்கு ஆளாகி கொண்டது.

ஆகவே, அல்லாஹ்விலிருந்துள்ள அருட்களும் சலுகைகளும் பெற்றுக் கொள்வதற்கு இதயம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இதயத்தின் தூய்மை என்பதற்கு நான் அர்த்தம் அளிப்பது, இதயத்தில் சிறிதளவிற்குக்கூட சிர்க்கு இருக்கக் கூடாது. நம் இதயத்தில் மனையைக் கட்டி கொள்ளும் உருவங்கள் எதுவும் இருக்கக்கூடாது. அது உங்களின் இதயத்தில் எஞ்சினால் அந்த உருவங்கள் உங்களின் இதயத்தை வேட்டையாடிக்கொள்ளும். அது உங்களில் பிரதிபலித்துக் கொள்ளும்.

2000-ம் ஆண்டில், அதாவது இறைவெளிப்பாட்டின் ஆரம்பத்தில் அல்லாஹ் என்னை அறிவித்தான். **“உன் இதயத்தை நீர் சுத்தமாக்கிக்கொள்வீராக. ஒரு கண்ணாடியைப் போன்று!”**

அதாவது நீ சுத்தப்படுத்தும் அத்தகையை கண்ணாடியில் தூசியோ அழுக்கோ இருப்பதில்லை. உன் முகத்தை மிக நன்றாக பார்க்க முடியும். அதைப் போன்றே உங்களின் இதயத்தை நீங்கள் சுத்தமாகமாற்றிக் கொள்ள வேண்டும். மிக தூய்மையான ஒரு கண்ணாடியை போன்று! அல்லாஹ் உங்களின் இதயத்தை பார்வையிடும் போது, அழுக்கின் எந்த அடையாளமும்

அதில் இருக்ககூடாது. இதயத்தின் எந்த பகுதியிலும் நயவஞ்சகத்தின் அம்சம் இருக்கக்கூடாது. இதயம் அவ்வாறு தூய்மையாகும் போது, அந் நேரம் அங்கு இறையடையாளங்கள் இறங்கி கொள்ளும். அத்தோடு இருள் போகிவிடும். வெளிச்சம் அதில் நிறைந்து விடும். ஆனால் இருதயத்தில் உருவங்களின் தடையங்கள் எதாவது எஞ்சினால் அந்நேரம் இதயம் அந்தகாரத்தால்., அழுக்குகளால், தூசிகளால் நிறைந்துவிடும். அல்லாஹ்வின் அடையாளங்கள் அதில் இறங்குவதில்லை அந்நிலையில் நீங்கள் இறை அடையாளங்களை எதிர்பார்கவேண்டாம்.

அத்தகைய இதயங்களில் வெறுப்பு நிறைந்துவிடும். இதற்கான அருமருந்து, அந்த நபர் ஏராளமாக துவா செய்ய வேண்டும் என்பதாகும். எந்த இதயத்தில் உருவங்கள் இருக்கின்றது என்பதைப் பற்றி அல்லாஹ் நன்கு அறிகின்றான். அவன் நாடிக்கொண்டால், அந்த உருவங்களையாவும் நீக்கிக் கொள்ள முடிந்து விடும். ஆனால் அதற்காக நீங்கள் அல்லாஹ்விடம் நேர்மையும் நம்பிக்கையும் வைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் முன் நீங்கள் சமர்ப்பிகின்ற பிரார்த்தனையை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக நீங்கள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை)முடையவும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல)வுடையவும் வழியினை பின்பற்ற வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை)மைப் போன்று நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் இருக்கவேண்டும். அந்த முன்மாதிரி அதாவது, அந்த நேர்மையுடனும் உண்மையுடனும் ஒருவர் முன் சென்றால் அவர் ஒரு அருளுக்குரியவராக மாறிவிடுவார். மக்கள் அவரை பரிகசித்தாரும் சரி, அவருக்கு அவர்கள் தீங்கு விளைவித்தாலும் சரி, அல்லாஹ் அவரிடம் வருகை தந்து, அவர் மீதான குற்றச்சாட்டுகளை நீக்கிக்கொள்ளவும் செய்வான். அத்தோடு அவருக்கு “ஹலாலான”தெல்லாம் அளித்துக் கொள்ளவும் செய்வான். அதுவாயிலாக (அதாவது அல்லாஹ்வின் அருட்களுடையவும் சலுகைகளுடையவும் வாசல் திறந்து விடுவது வாயிலாக) அவர் அல்லாஹ்வின் அருள் கொடைகளுக்கு வாரிசாக மாறி விடுவார். அல்லாஹ் அவரின் பாதுகாவலராக (வலிய்)மாறிவிடுவான். இயத்தின் சூழ்நிலைகளை மிக நன்றாக அறிபவன் அல்லாஹ்வாகயிருக்கிறான். அல்லாஹ்வின் உண்மையான அன்பை எவர் பெற்றுக்கொள்கின்றாரோ, அவரது பாதுகாவலன் அல்லாஹ்வாக மாறிவிடுவான்.

திருமறை மூலமாக அல்லாஹ் தெரிவிக்கின்றான்.

**“அல்லாஹ் உண்மையே கூறுகின்றான். ஆகவே நேர் வழி சென்ற இப்ராஹீமின் மார்க்கத்தையே பின்பற்றுங்கள் அவர் முஸ்ரிக்குகளில் ஒருவராக இருக்கவில்லை”(3:96)**

இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் அசாதாரணமான கீழ்பணிதலையும் தியாகங்களையும் பற்றி நாம் ஒவ்வொருவரும் மிக ஆழமாக சிந்திக்கவேண்டும். அதற்காக நான் பிரார்த்தனை செய்கின்றேன். அல்லாஹ், இதை எவ்வாறு ஏற்றுக்

கொண்டான்? எவ்வாறு அதற்கு நற்கூலி அளித்தான்? இதை பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். **அவர் இவை யாவும் செய்தது. அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டுமே.** அதில் ஒன்றைக்கூட அவர் வீணாக்கவில்லை. இஸ்மாயில் (அலை)மின் பரிபூரணமான கீழ்பணிதலைக் குறித்தது சிறுவர்கள் சிந்திக்க வேண்டும். எக்காலத்திற்கும் அல்லாஹ் அன்னாரை கண்ணியப்படுததிருப்பதும் எவ்வாறு என்றும் நாம் சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ்வின் வழியில் நேர்மையுடன் செய்யும் எல்லா தியாகங்களையும் அல்லாஹ் ஒரு போதும் வீணாக்குவதில்லை. எனக்கும் உங்களுக்கும் அந்த உண்மையான உயர்த்தன்மையை அளிப்பதற்காக நான் அல்லாஹ்விடம் பிராத்தனை செய்கின்றேன். எப்போதெல்லாம் நாம் தியாகங்கள் புரிகின்றோமோ அப்போதெல்லாம் அதை நம்மிடமிருந்து அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக! இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Published by:**

Jamaat Ul Sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817


**Issued by:**




**K. Nazeer,**
**State Amir - Tamil Nadu, India**
**Jamaat Ul Sahih Al Islam**